2—

கோட்டப் பொறியாளர் அலுவலகம்

***12772—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளபடி, அவர் கடந்த ஆண்டே இதுபோன்ற ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார்கள். இந்த ஆண்டு கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்குண்டான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணை விட்டு மறைந்தாலும், மக்களின் மனதை விட்டு மறையாமல் தமிழர்களின் மனதிலே என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இருபெரும் தலைவர்களான மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குத் தமிழகத்திலே நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் அதற்குத் துணையாக இருக்கின்ற துணை முதல்வர் அவர்களையும் வணங்கி என்னுடைய கேள்வியைக் கேட்கிறேன்.*

பேரவையை நடுநிலை தவறாமல் நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மின் கோட்டம், அரியலூர், செந்துறை, உடையார்பாளையம் மற்றும் ஆண்டிமடம் ஆகிய நான்கு தாலுகாக்களை உள்ளடக்கியது. இந்த நான்கு தாலுகாக்களும் சேர்ந்த மாவட்டத்திற்கு, மின் கோட்டத்தில் ஆறு உப கோட்டங்கள் உள்ளன. பிரிவு அலுவலகங்கள் 21; இயக்க ஊர்தி கோட்டங்கள் இரண்டு; 110 மற்றும் 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 13; 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் இரண்டு; மொத்தம் நுகர்வோர்கள் 2 இலட்சத்து 43 ஆயிரத்து 180; மாத வருமானம் ரூ.10 கோடி; உயரழுத்த நுகர்வோர் 20; நிலுவையில் உள்ள விவசாய மின் இணைப்புகள் 9,132; தயார் நிலையில் பதிவு செய்து விவசாய மின் இணைப்பிற்காகக் காத்திருப்போர் 1,265; மின் மாற்றிகள் 2,860; நிலுவையில் உள்ள துணை மின் நிலையங்கள் 11 ஆக, இவ்வளவு உள்ள இந்த மின் கோட்டத்திற்கு ஒரேயொரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் மட்டும் அரியலூரில் உள்ளது. எனவே, அரியலூர் மின் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஜெயங்கொண்டத்தை தலைமை இடமாகக் கொண்டு அங்கே ஒரு மின் கோட்டம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோட்டம் பிரிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், என்னென்ன வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதெல்லாம் விதிகளுக்குட்பட்டிருக்கின்ற காரணத்தினால், அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொன்னேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, கூடிய விரைவில் அது கிடைப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

2018 ஜனவரி 9]

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அரியலூர் மாவட்டத்திற்கும் பெரம்பலூர் மாவட்டத்திற்கும் சேர்த்து ஒரே S.E. அலுவலகம் மட்டும்தான் உள்ளது. எனவே, பெரம்பலூர் மாவட்டத்தில் தனியாகவும், அரியலூர் மாவட்டத்திற்குத் தனியாகவும் ஒரு S.E. அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் வறட்சியிலும், புயலிலும், மழையிலும் மின்வெட்டே இல்லாத ஒரு மாநிலமாக விளங்குவதற்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இதைச் செய்ய முன்வருவார்கள் என்று நம்பி, நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய மின் கோட்டத்தை உருவாக்குவதற்கு மின்சார வாரியத்திற்கு வருடந்தோறும் கிட்டத்தட்ட ஒன்றேகால் கோடி ரூபாய் செலவாகிக்கொண்டிருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டே இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோது, அந்தக் கோரிக்கையை அவர் வைத்தபோது, பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருந்தோம். எந்தெந்த கேள்விகள் கேட்கப்பட்டு பரிசீலிக்கப்படும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டனவோ, அவற்றில் செய்ய முடிந்தவற்றை உடனடியாகச் செய்து தரவேண்டும் என்று எங்களுக்கெல்லாம் இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள்.

முற்பகல் 10—25

அந்த அடிப்படையிலேதான், அந்தக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகச் சொல்லியிருந்தேன். இப்போது புதிதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு S.E. அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருந்த கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை எடுத்துவிட்டு, அதற்குப்பிறகு, S.E. அலுவலகம்

அமைப்பதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ள அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய அரசின் 'உதய்' மின் திட்டத்தில் இணைந்தது. அதனால் வாரியத்திற்கு ஏற்பட்ட நன்மைகள் அல்லது வருவாய், நீண்டகாலக் கடன் போன்றவை எப்படி வந்திருக்கின்றன? அதோடு, கடந்த மாதத்தில் 'தீன் தயாள் உபாத்யாய மின் திட்டம்' என்ற ஒரு திட்டத்தையும் மத்திய அரசு அறிவித்துள்ளது. அந்தத் திட்டத்தின் மூலமாகக் கிடைத்த மானியம் எவ்வளவு; நீண்டகால கடன் எவ்வளவு ஆகியவற்றைப் பற்றியெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூத்த உறுப்பினர். அவருக்கு சபையினுடைய நடவடிக்கையெல்லாம் தெரியும். இது கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பது தொடர்பான கேள்வி. அவர் 'உதய்' மின் திட்டத்தில் என்னென்ன பலன்கள் கிடைத்திருக்கின்றன என்று துணைக் கேள்வி கேட்டிருக்கின்றார். அவர் சார்ந்திருக்கிற கட்சி உறுப்பினர்கள் பேசவிருக்கின்றார்கள். அவர்கள் பேசுகின்றபோது, இந்தக் கேள்வியைக் கேட்டால், நான் பதில் சொல்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*